08.10.2021 அ.வ.எண்.310/2012

வா.சா.1 , சரிதா

குறுக்கு விசாரணை

இவ்வழக்கின் மற்ற வாதிகளை எவ்வாறு எனக்கு தெரியும் என்றால் 3ம் வாதியை தவிர அனைத்து வாதிகளும் என் தாயாருடன் பிறந்தவர்கள் ஆவர்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ1 ஆனது வாதிகள் அனைவரும் சேர்ந்து எனக்கு எழுதி கொடுத்த பொது அதிகார பத்திரம் என்றால் சரிதான். வா.சா.ஆ1 ஆனது வழக்கு சொத்தை விற்கவும் வழக்கு நடத்தவும் எனக்கு அனுமதி அளித்து வழங்கப்பட்ட பத்திரம் என்றால் சரிதான். பவர் அளித்த 5 வாதிகளும் தற்போது உயிருடன் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். வாதிகள் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளனர் என்று எனக்கு தெரியுமா என்றால் 3ம் பிரதிவாதி மீது தாவா சொத்தை பதிவு செய்யத காரணத்தினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்படடுள்ளது. தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் மோரை கிராமத்தில் உள்ளது அதன் சர்வே எண்.445/6 ஆகும். நாராயணசாமி என்பவர் என் அப்பாவிற்கு எழுதி கொடுத்து அதன் பெயரில் வழக்கு நடந்து தாவா சொத்து எங்களுக்கு சொந்தம் ஆனது. நாராயணசாமி கிரைய பத்திரம் எழுதி கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது. அந்த வழக்கின் விவரமும் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ3 ல் 2ஆம் பிரதிவாதி சி.என்.மணி என்பவர் யார் என்று தெரியுமா என்றால் அப்போது தெரியாது, இப்போதுதான் தெரியும். அந்த நாராயணசாமிக்கு சி.என்.மணி தவிர வேறு யாரும் பிள்ளைகள் உண்டா என்றால் வேறு பெண் குழந்தைகள் உள்ளனர். பெண் குழந்தையின் பெயர் ராணி அவரை மேற்கண்ட வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நாராயணசாமியின் வாரிசு சி.என்.மணி என்று குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அவருக்கு சி.என்.மணி என்ற வாரிசே கிடையாது என்றல் இல்லை அவர் பெயர் புருஷோத்தமன் என்றாலும் சி.என்.மணி என்று தான் எல்லோராலும் அழைக்கப்படுகிறார். வழக்கு சொத்தானது காலியாக உள்ளதா என்றால் இல்லை கட்டிடம் எழுப்பப்பட்டுள்ளது.

(பிரதி வாதியின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை செய்வதற்கு வேண்டி ஒத்தி வைக்கப்படுகிறது)